**தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் சங்கப் பதிவாளருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 76.18 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 72.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3.87 மில்லியன் அதாவது 5.08 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 64.72 | 61.13 | 3.59 | 5.55 |
| மூலதனம் | 11.46 | 11.18 | 0.28 | 2.44 |
| **மொத்தம்** | **76.18** | **72.31** | **3.87** | **5.08** |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.00 | 4.23 | 3.00 | 2.58 | 20.00 | 12.39 |

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு மீதிகளை முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 30101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தின் iii ஆம் பட்டோலையில் விதிக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 தொகையான, ஆகக்

குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 421,834 ஆல் அடையப்படாமல் இருந்ததுடன், இந்த எல்லை பின்பற்றப்படாமை தொடர்பாக திறைசேரி அங்கீகாரம் 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 30101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,120,964 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகளில் 01 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 125,514 ஆக இருந்தது. 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 927,849 ஆக இருந்ததுடன், காலப்பகுதியை குறிப்பிட முடியாத கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,601 ஆக இருந்தது. அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.3 செயலாற்றல்

----------------------

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------------------------

(அ) தேசிய மட்டத்தில் 16 கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவது இலக்காக இருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 சங்கங்கள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தன.

(ஆ) கூட்டுறவு சங்கங்களில் காணப்படும் முறைகேடுகள் தொடர்பாக பரிசோதனைகளை நடாத்துவதற்கு திட்டமிட்ட இலக்குகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுறவுச் சங்கங்களின் பிணக்குகள் தீர்த்தல் மற்றும் நீதிமன்றங்களுக்கு கொண்டு வரும் 750 சந்தர்ப்பங்கள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 129 தீர்ப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) கூட்டுறவு வியாபாரத்தை பலப்படுத்துவதற்காக அபிவிருத்தி திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தமான செயற்திட்டங்கள் எதுவும் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் / சமாஜங்களின் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 44,773,055 இல் மீளாய்வாண்டின் போது ரூபா 4,869,469 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு மிகை நிதியத்தின் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 616,176,853 தொகை கடன் மற்றும் வட்டியாக அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இம் மீதிகளிலிருந்து ரூபா 3,000,988 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச் சட்டத்தின் 44(எ) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் ஆண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் போது 26 கணக்கு அறிக்கைகள் கிடைத்திருந்ததுடன் அதில் 02 சங்கங்கள் மாத்திரம் கணக்காய்வினை பூர்த்தி செய்யப்பட்டு கணக்காய்வு அறிக்கை அனுப்பப்பட்டிருந்தன.

(ஈ) உரிய காலப்பகுதியில் கணக்கு அறிக்கைகளை கூட்டுறவு சங்கங்களின் மூலம் பெற்றுக்கொண்டு கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை 2016 திசெம்பர 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 16 கூட்டுறவுச் சங்கங்கள் இனங்காணப்பட்டு 50(அ) அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல், பதிவினை இரத்துச் செய்யும் அறிவித்தல்களை வெளியிடல் மற்றும் கலைப்பாளர்களை நியமித்தல் மற்றும் கலைப்பினை பூர்த்தி செய்து போன்றவை திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின்

செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது 50(அ) அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக 03 சங்கங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. கூட்டுறவுச் சங்கங்களின் கலைப்பு நடவடிக்கைகள் தாமதத்தின் காரணமாக இயங்காத சங்கங்களில் காணப்படும் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதும் குறைவாகப் பயன்படுத்தும் நிலைமைக்கு உட்படும் இடர் காணப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2016 திசெம்பர் வரையில் 13 சங்கங்கள் இயங்காத நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 22,413,246 தொகையொன்று கடனாக கூட்டுறவு திணைக்களத்தின் நிதியத்திற்கு அறவிட வேண்டியிருந்தன. அச் சங்கங்களிலிருந்து அறவிட வேண்டியிருந்த கடன்களை தீர்வு செய்து கலைத்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பிப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 06 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 105 | 78 | 27 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 12 | 08 |
| | **மொத்தம்** | **141** | **100** | **41** |